பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

13 08 2026 6 45

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தமிழகத்தில் பழங்குடியினரின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- தமிழகத்தில் ரயில்வே திட்டங்கள் விரைவாக செயல்படுத்தப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.
- வீட்டு வசதி வாரியத்தின் விற்பனைக்குரிய வீடுகள் அல்லது மனைகளை விற்பதற்கான இணையவழி விற்பனைத் தளத்தை மாநில அரசு தொடங்கியுள்ளது.
- நீலகிரி, தேனி மாவட்டங்களின் சில இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் சேப்பாக் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் சேலம் அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தமிழகத்தில் பழங்குடியினரின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு துர்காதாஸ் உய்கே இதனைத் தெரிவித்தார்.

மாநில அரசுடன் இணைந்து பழங்குடியினரின் குடியிருப்புப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

பழங்குடியினர் மேம்பாட்டு மையங்கள் மூலம் தமிழகத்தில் பழங்குடியினர் சுய உதவிக் குழுவுக்கு தேசிய பழங்குடியினர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கடன்களும், திறன்மேம்பாட்டுப் பயிற்சிகளும் அளிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

உயர்கல்விக்கான உதவித் தொகைகள், ஆராய்ச்சிக்கான ஊக்கத் தொகைகள் போன்றவையும், பழங்குடியின மாணவர்களுக்கு வழங்கப்படுவதாக திரு. துர்காதாஸ் உய்கே கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் ரயில்வே திட்டங்கள் விரைவாக செயல்படுத்தப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், மாநிலத்தில் புதிய ரயில் பாதை அமைக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

கரூர் - திண்டுக்கல் மற்றும் திருச்சி - கரூர் இடையே இரட்டை ரயில்பாதை திட்டங்களுக்கான ஆய்வுகள் நிறைவு பெற்று திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஈரோடு - கரூர் இரட்டை ரயில்பாதை திட்டத்திற்கு அண்மையில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்த அவர், காட்பாடி - வேலூர் - விழுப்புரம் இடையே இரட்டை ரயில்பாதை அமைக்கும் திட்டத்திற்கான கள ஆய்வுகள் நிறைவடைந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அரக்கோணம் - காட்பாடி - ஈரோடு இடையே 3வது மற்றும் 4வது பாதை அமைப்பதற்கான இறுதி ஆய்வுகள் நிறைவடைந்து திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டள்ளதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகளை அகலப்படுத்தும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், இதுவரை ஆயிரத்து 900 கிலோ மீட்டர் தொலைவுக்கு தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக கூறினார்.

தற்போது மாநிலம் முழுவதும் 961 கிலோ மீட்டர் தொலைவிற்கு சாலைப் பணிகள் பல்வேறு கட்டங்களில் நடைபெற்று வருவதாக அவர் குறிப்பிட்டார்.

தமிழகத்திற்கு கடந்த 5 ஆண்டுகளில் நெடுஞ்சாலைப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் சென்னை - பெங்களூரு விரைவுச் சாலை, சென்னை துறைமுகம் - மதுரவாயல் உயர்மட்டச் சாலை உள்ளிட்ட பணிகள் விரைவாக நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

தருமபுரி - சேலம் இடையே தொப்பூர் கணவாய் பகுதியில் சாலை மேம்பாட்டுப் பணிகள் 45 சதவீதம் நிறைவடைந்துள்ளதாகவும் திரு. நிதின் கட்கரி தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் விற்பனைக்குரிய வீடுகள் அல்லது மனைகளை, விற்பதற்கான இணையவழி விற்பனைத் தளத்தை மாநில வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. ராஜ்குமார் தொடங்கி வைத்தார்.

இதுகுறித்து மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பல்வேறு திட்டங்களின் மூலம் 7 ஆயிரத்து 659 வீடுகள் அல்லது மனைகள் விற்பனை செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக இம்மாதம் 21ஆம் தேதி முதல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

அத்துடன் விற்பனைக்கு தயாராக உள்ள 854 வணிக கடைகளுக்கு மின் ஏலத்திற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 25ஆம் தேதி முதல் பதிவேற்றம் செய்யலாம் என்றும் மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

பிதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டத்தின்கீழ் தொழில் தொடங்குவதற்கு கடனுதவி வழங்கப்படுகிறது.

இதன்மூலம் கடன் பெற்று சிறுதானியங்கள், உணவுப் பொருட்கள் தயரிக்கும் நிறுவனம் நடத்தி வருவதாக தேனியைச் சேர்ந்த பயனாளி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள ஸ்ரீ ஆண்டாள் திருக்கோயிலில் ஆடிப்பூரம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இவ்விழாவின் 7ஆம் நாளான நேற்று ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாணக் கோலத்தில் காட்சியளித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தில் நீலகிரி மற்றும் தேனி மாவட்டங்களின் சில இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களின் ஒருசில பகுதிகளில் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் கூறியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் சில பகுதிகளில் லேசான மடை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ரஷ்யாவின் Novorossiysk துறைமுகத்தின் மீது யுக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலில் 2 முக்கிய தானிய ஏற்றுமதி முனையங்கள் சேதமடைந்தன.

<<<<>>>>

காங்கோ நாட்டில் பரவி வரும் எபோலா வைரஸ் நோய்த்தொற்றால் இதுவரை 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் கிருஷ்ணா சுவாமிநாதன், போர்ட்லூயிசில் மொரீஷியஸ் பிரதமர் திரு. நவீன்சந்திர ராம்கூலத்துடன் இருதரப்பு கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து விவாதித்தார்.

<<<<>>>>

ஹரியானாவில் மாநில அளவிலான ஹெச்.ஐ.வி. தொற்று விழிப்புணர்வு முகாமை அம்மாநில முதலமைச்சர் திரு. நயாப் சிங் சைனி பஞ்ச்குலாவில் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

ரயில் ஒன் செயலியில் நாள்தோறும் சராசரியாக 10 லட்சம் பயணச்சீட்டுகள் பதிவு செய்யப்படுவதாக இந்திய ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சிபிஎஸ்இ 12ஆம் வகுப்பு துணைத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

<<<<>>>>

தமிழகத்தில் பிளஸ்-2 துணைத் தேர்வெழுதி விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்தவர்கள் இன்று பிற்பகல் முதல் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்று அரசுத் தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தருமபுரி மாவட்டம் பாளையம்புதூர் ஊராட்சியில் மத்திய பட்டு வாரியம் சார்பில் பட்டுப்புழு வளர்ப்பு குறித்த கருத்தரங்கு நடைபெற்றது.

<<<<>>>>

பெரம்பலூர் மாவட்டத்தில் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் 316 பயனாளிகளுக்கு ஆட்சியர் திருமதி சரண்யா நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

<<<<>>>>

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி வட்டம் நாயக்கனூர் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 112 பயனாளிகளுக்கு ஆட்சியர் திரு. ரவிக்குமார் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

<<<<>>>>

சென்னையில் வில்லிவாக்கம் சட்டப்பேரவைத் தொகுதிக்குட்பட்ட 94 மற்றும் 95வது வட்டங்களில் பொதுமக்களின் அடிப்படை வசதிகளுக்கான சிறப்பு முகாம் நடைபெற்றது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் சேப்பாக் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் சேலம் அணியை வென்றது.

திண்டுக்கல்லில் நடைபெற்று வரும் இப்போட்டியில் முதலில் பேட் செய்த சேலம் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 182 ரன் எடுத்தது.

183 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிங்கிய சேப்பாக் அணி, 16 புள்ளி 4 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 186 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் கோவை - நெல்லை அணியையும், திருப்பூர் - திருச்சி அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<>>>>